1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, இந்த அவைக்கு வந்து பதவிப் பிரமாணம் எடுத்து உறுப்பினராகச் செயல்பட வேண்டிய உறுப்பினரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் எத்தனை நாட்களுக்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அதற்கேற்ப பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுவது என்பது அவருக்குள்ள உரிமை. அதை உள்நோக்கோடு, வேறுவிதமாகக் கருதிப் பேசுவது தவறு. ஆகவே அவர் வாராததால் இந்த அவையை அவமதிக்கிற மாதிரி சொல்லுவது தவறு. உறுப்பினருக்குள்ள உரிமையின்படி அவர் அந்தக் காலத்திற்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார். திடீரென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு நாள் வரவில்லை என்றால், பிறகு முக்கியமான பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டிய நிலை வரலாம். ஆகவே இது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாக வராது. அது உறுப்பினருக்குள்ள உரிமை. அந்தக் காலத்திற்குள் அவர் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பியது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஒருவர் இந்த அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இவ்வளவு நாட்களுக்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விதி முறை இருக்கிறது. அதற்குள் அவர் வராவிட்டால் இயற்கையாகவே அவருடைய பதவி காலாவதியாகிறது. அவ்வளவுதான் அவைத் தலைவரும், இந்த அவையும் அக்கறையைச் செலுத்த முடியும். அவர் எத்தனை நாள் கழித்து வருகிறார் என்பதைப்பற்றி அவைக்கு அக்கறையில்லை.

(முற்பகல் 11.00)

3. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1981 மார்ச் 2

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981).

4. கவன ஈர்ப்பு.

(1) பதினோராண்டு பள்ளிப் படிப்புத் திட்டத்தின் கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப் படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து.

திரு. த. சந்தோஷம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பதினோராண்டு பள்ளிப் படிப்புத் திட்டத்தின் கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த 1969 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்கள் வருகின்ற ஆண்டு 1981 மார்ச்சு தேர்வு எழுத முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால், ஒருவேளை அந்த இடைக்கால நாட்களுக்குள் அவர்கள் வயது வரம்பை மீறுவார்கள் என்ற நிலைமைகள் ஏற்படும். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படிப்புத் தகுதியுடன் வேலை வாய்ப்புக்கு என்று செல்லும் போது, அந்த வாய்ப்புக்கள் அவர்களுக்கு நழுவக்கூடிய நிலை இருக்கிறது

@ 77-79 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.